1968 மார்ச் 4]

இப்படியெல்லாம உதவி செய்வதால் அத்திட்டம் நல்ல முறையில் அபிவிருத்தி அடைந்திருக்கிறது. அந்த மாதிரி ஊக்கம் கொடுக்க இந்த அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதும் கூட்டுறவுத் திட்டத்தின் அடிப்படை அதுதான். தனிப்பட்ட நிலம் வைத்திருப்ப வர்கள் தங்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு தண்ணீர் வசதி போன்ற மற்ற வசதிகளை பெறமுடியாது. பொருளாதார வசதிக் குறைவு இருக்கும் என்ற அடிப்படையில் பல பேர்கள் சேர்ந்து செய்தால் அதற்காக அரசாங்கம் கடன் வசதி போன்ற மற்ற வசதிகளை செய்து கொடுக்கிறார்கள். அவர்களின் உற்பத்திப் பொருள்களை மார்க்கெட்டிங் சொஸைட்டிகள், கூட்டுறவு ஸ்டோர்கள் மூலம் விற்கவும் வசதி இருக்கிறது.

Mosquito Menace in City

***137 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—**

(*a*) whether the Government are aware of the mosquito menace in the City of Madras ; and

(*b*) if so, the steps that are being taken to eradicate this nuisance ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) ஆம்.

(இ) பேரவைமுன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. விநாயகம் : சென்னை நகரில் கொசு தொல்லை அதிகமாகி விட்டது என்பதில் எவருக்கும் அபிப்பிராயபேதம் இல்லை. கொசு உற்பத்தியாவது பக்கிங்காம் கனால், ஐயா வசிக்கிற அடையாறு பகுதி இங்குதான் கொசு அதிகமாக உண்டாகிறது.

Whereas the Buckingham Canal and the Adyar river have been considered as the breeding centres for these mosquitoes, will the Government take interest to see that it is entirely eradicated from the State of Madras by undertaking large-scale underground drainage schemes and also filling up storm water drainage. Lastly, may I also know whether the mosquitoes that are troubling the Hon. Minister for Public Health are bigger than the mosquitoes that are troubling me in Triplicane ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கொசுத் தொல்லை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. கொசுக்கள் மாம்பலம், அடையாறு என்று வித்தியாசம் பாராட்டுவதில்லை. என்னைவிட அவர்களுக்குத்தான் அதிகத் தொல்லை கொடுத்துவரும் என்று எதிர் பார்க்கிறேன். அத்தொல்லையைத் தீர்க்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கார்ப்பரேஷனால் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அரசாங்கம் அதில் அக்கறை கொண்டு தீவிர நடவடிக்கைகள் மூலம் கொசுத் தொல்லையை தவிர்க்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. எம். கண்ணப்பன் : தலைவரவர்களே, நிலையாக ஓரிடத்தில் இல்லாமல் அடிக்கடி இடம் விட்டு இடம் மாறும் சில கொசுக்கள் இருக்கின்றனவே, அதைப்பற்றி அரசாங்கத்திற்குத் தெரியுமா ? மு' ப. 10.00

---

* 81–82-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு எஸ் ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினரவர்கள் எந்தக் கொசுவை மனத்தில் வைத்து கேள்வி கேட்கிறார்கள் என்பது தெரியவில்லை. என்றாலும் ஓரிடத்திலே இருக்கும் கொசுக்கள் இடம் மாறி வளமாக வாழலாம் என்று விரும்பிச் செல்லுகின்றன. ஆனால் அங்கு நம்மால் ஏமாற்றப்பட்டு அவைகள் அதிகத் தொல்லைக்கு ஆளாகின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், சென்னை நகரத்தில் கொசுத்தொல்லை இருப்பதைப்போல நம் மாநிலத்தில் பல்வேறு தோட்டங்களில் கொசுத் தொல்லை இருக்கிறது. அங்கே இரப்பர் தோட்டம், டீ தோட்டம் போன்ற இடங்களில் வசிக்கும் தொழிலாளிகளுக்குக் கொசுக்கள் தொல்லை கொடுப்பதால் அதனை மாற்ற அந்தத் தோட்ட முதலாளிகள் தொழிலாளிகளுக்கு கொசுவலை போன்றவைகளைக் கொடுத்து அவர்களது தொல்லையை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கூற ஏதேனும் ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்படிப்பட்ட யோசனையை கனம் உறுப்பினர் அவர்கள் முதலாளிகளுக்கும் சொல்லலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், பெரும்புயல் வீசியதாலும் இதுவரை கண்டிராத பெருமழை பொழிந்ததாலும் வடிகால்கள் தூர்ந்துவிட்ட காரணத்தாலும் கொசுக்கள் அதிகமாக உற்பத்தியாகி விட்டன. இப்பொழுது கடந்த சில வாரங்களாகக் கொசுத்தொல்லை குறைந்திருப்பதாக இந்த ரிப்போர்ட்டில் உள்ளது. அங்கத்தினர்கள் வசிக்கக்கூடிய இடங்களில் கொசுத் தொல்லை சொல்லவே முடியாது. நமது அங்கத்தினர்களிலேயே ஒருவர் கார்ப்பரேஷன் மேயராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆகவே, உடனடியாக இந்தக் கொசுத் தொல்லையைப் போக்க அங்கத்தினர்கள் வசிக்கக்கூடிய அந்த விடுதியைக் கவனிக்க அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எல்லோருக்குமே செய்ய வேண்டும். உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல; பொதுமக்களுக்கும் செய்ய வேண்டியது அவசியம். அரசாங்கமும் நடவடிக்கை எடுக்கிறது. கார்ப்பரேஷனும் தீவிர கவனம் செலுத்துகிறது.

திரு. எம். கோபால் : ஐயா, சென்னையிலும், தமிழ் நாட்டிலும் இப்பொழுது மஞ்சள்காமாலை நோய் அதிகமாக ஏற்பட்டு அதனால் பலர் இறந்து போகிறார்கள். ஆகவே அதைத் தடுக்க நமது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறதா ? எடுக்கப் போகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதுபற்றி இரண்டு நாட்களுக்கு முன்பு விவர அறிக்கை ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அங்கத்தினர் அவர்கள் அந்த அறிக்கையை வாசிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. ரா. ராமச்சந்திரதுரை : தலைவரவர்களே, பல ஆண்டுகளாக இந்தக் கொசு ஒழிப்பு மருந்து அடித்து வந்தும் கொசுக்கள் ஒழிவதற்கு பதிலாக வளர்ந்து வருவதாகத்தான் தெரிகிறது. எனவே இந்த மருந்து முறையை மாற்றிக் கொசுவை ஒழிக்கக்கூடிய நல்ல மருந்தாகத் தயாரிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விஞ்ஞான முறையாக மருந்துகள் தயாரிக்கப்பட்டு கொசுக்கள் ஒழிக்கப்பட்டு வருகின்றன. கார்ப்பரேஷன் மூலமாக “ வயலெட் ரே ”பாய்ச்சி ஒழிக்கலாம் என்ற கருத்து சொல்லப்பட்டது. அந்தக் கருத்து பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. கே. விநாயகம் : சார், இந்தக் கொசுத் தொல்லை சென்னையிலே கடந்த இருபது ஆண்டுகளாக இவ்வளவு அதிகமாக இல்லை. இப்பொழுதுதான், ஒரு ஆண்டாகத்தான் அதிகமாக இருக்கிறதாக ஜனங்கள் சொல்லிக்கொள்கிறார்கள். இதற்கு ஏதாவது பிரத்தியேகக் காரணம் உண்டா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இருபது ஆண்டுகளாகச் சேர்ந்திருந்து இப்பொழுது ஒரேயடியாக தொல்லை கொடுக்கின்றன.

Dr. H. V. HANDE : The same question was asked two or three years ago. The then Minister replied that he was not in charge of mosquitoes. The fact remains that mosquitoes are a nuisance and the number of injections they give in day time and night time is something unthinkable. The Government have got a programme to widen the Buckingham Canal. Will the Minister for Health or the Minister for Public Works tell us whether the scheme has been taken up in right earnest and whether any beginning has been made ? Is the Minister aware that wherever there are cemented portions and non-marchy areas, the mosquito menace is not very serious ? Will the Government take all these factors into consideration and tell us what concrete steps they have taken ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எந்தெந்த வகைகளில் கொசுத் தொல்லைகளை ஒழிக்கலாம் என்பதைப் பற்றி விரிவாகப் பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்கொண்டும் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. எஸ். எஸ். மணி : சார், மலையில் இருக்கக்கூடிய கொசுக்களுக்கும், நாட்டுப் பிரதேசங்களில் இருக்கக்கூடிய கொசுக்களுக்கும் வித்தியாசம் உண்டா ? மலைக்கொசு கடித்தால் மலேரியா நோய் வரும் என்று சொல்கிறார்கள். நாட்டுக் கொசுக்கள் கடித்தால் என்ன நோய் வரும் ? கும்பகோணம் கொசுவிற்கும் சென்னைக் கொசுவிற்கும் என் வித்தியாசம் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மலையிலிருக்கிற கொசுக்களுக்கும், நகரத்திலிருக்கும் கொசுக்களுக்கும் என்ன வித்தியாசம் என்று தெரியாது. மலையிலிருக்கும் கொசுக்கள் மலையிலிருப்பவர்களைக் கடிக்கின்றன. நகரத்தில் உள்ள கொசுக்கள் நகரத்திலுள்ளவர்களைக் கடிக்கின்றன.

திரு. கு. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, சென்ற 20 ஆண்டு காலமாக கொசுக்கள் பொதுமக்கள் இரத்தத்தைக் குடித்துக் கொண்டிருந்தன. இந்த வருஷம் மட்டும் அவைகள் பெரிய அளவில் இறந்துவிட்டன என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை.)

Rent Control Act

*138 *Q.*—**Thiru K. M. RAMASWAMI GOUNDER** : Will the Hon. the Minister of Public Health be pleased to state whether there is any proposal to implement the provisions of the Rent Control Act more effectively in view of the acute shortage of housing in Madras City and undue rise in the rental value of houses ?